**ஜூன் – 29**

# TNPSC துளிகள்


- மத்தியப் பிரதேசத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமான மாண்டுவின் குராசானி புளிக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
  - குராசானி புளி என்பது ஆப்பிரிக்காவைச் சேர்ந்த பாவோபாப் மரத்தின் (அடான்சோனியா டிஜிட்டாட்டா) பழமாகும் என்பதுடன் சுமார் 600 ஆண்டுகளுக்கு முன்பு ஆப்கானிய மற்றும் அரேபிய வணிகர்களால் மாண்டு என்ற பகுதிக்கு இது கொண்டு வரப் பட்டதாக நம்பப்படுகிறது.
- தெலுங்கானாவின் ஹைதராபாத்தில் உள்ள உஸ்மானியா பல்கலைக்கழகம், இந்திய தர நிர்ணய அமைப்பால் (BIS) வழங்கப்படும் நான்கு சர்வதேச தர நிர்ணய அமைப்பு (ISO) சான்றிதழ்களை ஒரே நேரத்தில் பெற்ற இந்தியாவின் முதல் பல்கலைக்கழகமாக உருவெடுத்துள்ளது.
  - இந்தச் சான்றிதழ்கள் கல்வி நிர்வாகம், சுற்றுச்சூழல் மேலாண்மை, ஆற்றல் மேலாண்மை மற்றும் உணவுப் பாதுகாப்பு மேலாண்மை அமைப்புகளை உள்ளடக்கியவை.
- சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (CPCL) நிறுவனமானது இந்தியாவின் 28வது நவரத்னா மத்திய பொதுத்துறை நிறுவனமாக (CPSE) உருவெடுத்து உள்ளது மற்றும் இந்த நிறுவனம் தமிழ்நாட்டின் மணலி (சென்னை) மற்றும் நாகப் பட்டினம் ஆகிய இடங்களில் முக்கியப் பெட்ரோலியச் சுத்திகரிப்பு நிலையங்களை இயக்கி வருகிறது.
- மான்செஸ்டரில் தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக நடைபெற்ற 2026 ஆம் ஆண்டு மகளிர் டி20 உலகக் கோப்பையின் போது, 200 சர்வதேச இருபது ஓவர் (T20I) போட்டிகளில் விளையாடிய உலகின் முதல் கிரிக்கெட் வீரர் (ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில்) என்ற பெருமையை இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் கேப்டன் ஹர்மன்பிரீத் கவுர் பெற்றார்.
- 2026 ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் (FIH) நேஷன்ஸ் கோப்பை இறுதிப் போட்டியில் இந்திய மகளிர் ஹாக்கி அணி 2-0 என்ற கோல் கணக்கில் நியூசிலாந்தை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றது.
- 2026 ஆம் ஆண்டிற்கான பிரிக்ஸ் விண்வெளி முகமைகளின் தலைவர்கள் (HOSA) கூட்டம் ஆனது இந்தியாவின் தலைமையில் பெங்களூருவில் நடைபெற்றது.
  - பேரிடர் மேலாண்மை மற்றும் பருவநிலை மாற்றக் கண்காணிப்பிற்கான தொலையுணர்வு செயற்கைக் கோள் அமைப்புகள் குறித்து இக்கூட்டம் கவனம் செலுத்தியது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## காவிரி படுகைக்கான புதிய வழிகாட்டுதல்கள்

- காவிரி படுகையில் நீர்வளத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின் புதிய வழிகாட்டுதல்களுக்கு தமிழ்நாடு எதிர்ப்புத் தெரிவித்து உள்ளது.
- புதிய வழிகாட்டுதல்களின்படி, விரிவான திட்ட அறிக்கையை (DPR) தயாரிப்பதற்கு முன் மாநிலங்கள் முதற்கட்ட அறிக்கை (PR), முன் சாத்தியக் கூறு அறிக்கை (PFR) அல்லது கருத்துருக் குறிப்பை சமர்ப்பிக்க வேண்டும்.

- மத்திய நீர் ஆணையம் (CWC) இந்த முன்மொழிவை ஆய்வு செய்து தனது தொழில் நுட்பக் குறிப்பை காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு (CWMA) அனுப்பும்.
- புதிய வழிகாட்டுதல்களின் படி, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் 6 மாதங்களுக்குள் தனது கருத்துகளைத் தெரிவிக்கவில்லை என்றால், அது அவர்களின் ஒப்புதலாக கருதப்படும்.
- காவிரி ஒரு நீர் பற்றாக்குறை படுகை என்று குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு, இந்த வழி காட்டுதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளதுடன், ஒப்புதல் அளிக்கப்பட்டதாகக் கருதும் விதிமுறை குறித்தும் கவலைகளை எழுப்பியுள்ளது.
- இந்த வழிகாட்டுதல்கள் 2017 ஆம் ஆண்டு திட்ட மதிப்பீட்டு விதிமுறைகள் மற்றும் 2007 ஆம் ஆண்டு காவிரி நடுவர் மன்றத்தின் (CWDT) இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் அமைந்துள்ளன.




## மதம் மாறியவர்களுக்கான பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) தகுதி குறித்த சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு

- இஸ்லாத்திற்கு மதம் மாறும் ஒருவர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) தகுதியைக் கோர முடியாது என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளதுடன், தமிழ்நாடு அரசின் 2024 ஆம் ஆண்டின் அரசாணையை அரசியல் சாசனத்திற்கு முரணானது எனவும் அறிவித்துள்ளது.
- இஸ்லாத்திற்கு மதம் மாறும் ஒருவர் இஸ்லாமியராக மட்டுமே கருதப்படுவார் என்றும், பிறப்பின் அடிப்படையில் ஒரு இஸ்லாமியச் சமூகத்திலோ அல்லது பிரிவிலோ உறுப்பினராகக் கோர முடியாது என்றும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.
- மதம் மாறிய சிலருக்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) இடஒதுக்கீடு சலுகைகளைப் பெற அனுமதித்த 2024 ஆம் ஆண்டு அரசாணையை நீதிமன்றம் ரத்து செய்தது.
- பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், அறிவிக்கப்படாத சமூகங்கள் அல்லது பட்டியல் சாதியினரிடமிருந்து இஸ்லாமிற்கு மதம் மாறுபவர், இட ஒதுக்கீட்டுப் பலனைப் பெறுவதற்காக பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக (முஸ்லிம்) கருதப் படலாம் என்றும், அவ்வாறு மதம் மாறியவுடன், அறிவிக்கப்பட்ட ஏழு பிரிவுகளில் ஒன்றைச் சேர்ந்தவர் என்பதற்கான சமூகச் சான்றிதழ் அவருக்கு வழங்கப் படலாம் என்றும் அரசாணை உத்தரவிட்டது.
- இருப்பினும், முன்னேறிய சமூகத்திலிருந்து இஸ்லாமிற்கு மதம் மாறுபவருக்கு பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் (முஸ்லிம்) என்ற முத்திரை கிடைக்காது என்று அரசு

கூறியது.

- தங்கள் பூர்வீக மதத்தில் ஏற்கனவே இட ஒதுக்கீட்டுப் பலனை அனுபவித்து வருபவர்கள் மட்டுமே, இஸ்லாமிற்கு மதம் மாறுவதால் அதனை இழக்க மாட்டார்கள்.
- எனவே இதன் மூலம் சமூக சமநிலை பாதிக்கப்படாது.
- அங்கீகரிக்கப்பட்ட முஸ்லிம் சமூகங்களான லெப்பை, ராவுத்தர் மற்றும் மரைக்காயர் ஆகியவை பிறப்பை அடிப்படையாகக் கொண்ட சமூகங்கள் என்றும், அவற்றை மதம் மாறுவதன் மூலம் பெற முடியாது என்றும் அத்தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.
- முந்தைய நீதிமன்றத் தீர்ப்புகளை ஒரு அரசாணை மூலம் மீறவோ அல்லது ரத்து செய்யவோ முடியாது என நீதிமன்றம் கூறியுள்ளது.
- அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு என்பது அரசியலமைப்பில் ஆழமாக வேரூன்றிய ஒரு கொள்கையாகும் என்பதோடு அது சட்டத்தின் ஆட்சியின் இன்றியமையாத அங்கமாகும்.
- இந்தக் கொள்கை நீதிமன்றங்களின் இறுதித் தீர்ப்புகளுக்கும் பொருந்தும்.
- சட்டமன்றம், ஒரு நீதிமன்றத்தின் எந்தவொரு தீர்ப்பையும் செல்லாதது என்றோ அல்லது பயனற்றது என்றோ அறிவிக்க முடியாது.
- இஸ்லாத்திற்கு மதம் மாறிய பின்பு முஸ்லிம் லெப்பை சமூகச் சான்றிதழ் கோரிய மனுவை விசாரித்தபோதே இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

**Madras HC Rules Converts to Islam Cannot Claim BC Muslim Reservation**


The court also **struck down a 2024 Tamil Nadu Government Order (G.O.)** that allowed converts from Backward Classes (BC), Most Backward Classes (MBC), Denotified Communities (DNC) and Scheduled Castes (SC) to **obtain community certificates** under one of the state's seven notified Backward Class Muslim communities.

## உழவர் அலுவலர் தொடர்பு 2.0 திட்டம்

- 'உழவர் அலுவலர் தொடர்பு 2.0' திட்டத்தை ரத்து செய்யாமல் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் என காவிரி டெல்டா விவசாயிகள் கூட்டமைப்பு தமிழ்நாடு அரசை வலியுறுத்தியுள்ளது.
- பல பயிர்களைப் பயிரிடும் விவசாயிகளுக்கு ஒரு அரசு அலுவலரே சேவைகளை

ஒருங்கிணைக்க இத்திட்டம் அனுமதிக்கிறது என்பதுடன் இதன் மூலம் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்களை அணுக வேண்டிய தேவையைக் குறைக்கிறது.

- விவசாயிகளுக்கு விரைவான பயிர் ஆய்வு, தொழில்நுட்ப வழிகாட்டுதல் மற்றும் சரியான நேரத்தில் மானியத் தொகைகளை வழங்குவதை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும்.
- இக்கூட்டமைப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்த விவசாயப் பரப்பளவில் 17,163 வருவாய் கிராமங்களில் 76% நிலம் வேளாண் பயிர்களின் கீழும், 24% நிலம் தோட்டக்கலைப் பயிர்களின் கீழும் உள்ளன.
- இத்திட்டத்தைத் தொடர்வது மானியங்கள் வழங்குவதில் ஏற்படும் தாமதத்தைக் குறைக்கும் மற்றும் விவசாயிகளுக்கான சேவைகளை மேம்படுத்தும் என இந்தக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.




## தேசியச் செய்திகள்

### உலகின் மிகப்பெரிய கப்பல் மறுசுழற்சி செய்யும் நாடு - இந்தியா




- உலகளாவிய கப்பல் மறுசுழற்சியில் 35.4% பங்குகளுடன், இந்தியா 2025 ஆம் ஆண்டில்

உலகின் மிகப்பெரிய கப்பல் மறுசுழற்சி செய்யும் நாடாக உருவெடுத்துள்ளது.

- 2024 ஆம் ஆண்டில் 1.86 மில்லியன் மொத்த டன் என்ற அளவில் இருந்த கப்பல் மறு சுழற்சி, 2025 ஆம் ஆண்டில் 2.99 மில்லியன் மொத்த டன்னாக அதிகரித்து இந்தியா மறு சுழற்சி செய்துள்ளது.
- குஜராத்தில் உள்ள அலங் கப்பல் மறுசுழற்சி தளம் உலகின் மிகப்பெரிய கப்பல் மறு சுழற்சி வசதிகளில் ஒன்றாகும்.
- 2019 ஆம் ஆண்டின் கப்பல்கள் மறுசுழற்சிச் சட்டமானது, பாதுகாப்பான மற்றும் சுற்றுச் சூழல் ரீதியாக முறையான கப்பல் மறுசுழற்சிக்கான ஹாங்காங் சர்வதேச மாநாட்டுடன் இந்தியாவின் கப்பல் மறுசுழற்சி விதிகளை ஒருங்கிணைக்கிறது.
- இந்தியா இந்த மாநாட்டிற்கு 2019 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்தது, மேலும் இது 2025 ஆம் ஆண்டு ஜூன் 26 முதல் கட்டாயமாக்கப்பட்டது.
- இந்திய கடல்சார் தொலைநோக்கு 2030-இன் கீழ், தனது கப்பல் மறுசுழற்சி திறனை 9 மில்லியன் இலகு இடப்பெயர்வு டன்களாக (LDT) விரிவுபடுத்துவதை இந்தியா நோக்கமாகக் கொண்டுள்ளது.

## உலகின் இரண்டாவது மிகப்பெரிய மீன் உற்பத்தியாளர் - இந்தியா




- 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய நீர்வாழ் விலங்கு உற்பத்தியில் சுமார் 9% பங்குகளுடன் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தைப் பிடித்து உள்ளது.
- நதிகள், ஏரிகள், நீர்த்தேக்கங்கள், குளங்கள் மற்றும் சதுப்பு நிலங்களில் இருந்து 2.2 மில்லியன் டன் உற்பத்தி செய்து, உள்நாட்டு மீன் உற்பத்தியில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- உலகளாவிய நீர்வாழ் உயிரி வளர்ப்பு உற்பத்தியில் சுமார் 12% பங்குகளுடன் இந்தியா இரண்டாவது மிகப்பெரிய உற்பத்தியாளராகவும் உள்ளது.
- மீன்வளத்துறை சுமார் 30 மில்லியன் மக்களின் வாழ்வாதாரத்தை ஆதரிப்பதுடன், உணவுப் பாதுகாப்பு, ஏற்றுமதி மற்றும் விவசாய வளர்ச்சிக்கும் பங்களிக்கிறது.
- 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரி வளர்ப்பு உற்பத்தி

சாதனை அளவாக 235 மில்லியன் டன்களை எட்டியுள்ளது என்று அறிக்கை குறிப்பிட்டு உள்ளது என்பதுடன் இது முக்கியமாக நீர்வாழ் உயிரி வளர்ப்பினால் உந்தப்பட்டுள்ளது.

## நிர்பய் சேத்னா முன்னெடுப்பு


- ❖ பஞ்சாயத்து ராஜ் அமைச்சகமானது உலகின் மிகப்பெரிய பெண்கள் பாதுகாப்பு மற்றும் பாலின உணர்திறன் குறித்த முன்னெடுப்பான 'நிர்பய் சேத்னா'-வைத் தொடங்கியுள்ளது.
- ❖ நிர்பய் சேத்னா என்பது நிர்பயா நிதியின் கீழ் நிதியளிக்கப்படும் 'நிர்பய் ரஹோ' திட்டத்தின் ஒரு பகுதியாகும் மற்றும் இது இந்தியா முழுவதும் உள்ள அனைத்துப் பஞ்சாயத்துகளையும் உள்ளடக்கும்.
- ❖ 28,500 முதன்மைப் பயிற்சியாளர்களின் ஆதரவுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட 17.5 லட்சத்திற்கும் மேற்பட்ட ஆண் பஞ்சாயத்து ராஜ் பிரதிநிதிகளுக்கு பாலின சமத்துவம், பெண்கள் உரிமை மற்றும் பாதுகாப்பு குறித்து இத்திட்டம் பயிற்சியளிக்கும்.
- ❖ 'நிர்பய் நேத்ரி' திட்டமானது தேர்ந்தெடுக்கப்பட்ட 14.5 லட்சத்திற்கும் மேற்பட்ட பெண் பிரதிநிதிகளுக்கு சட்ட அறிவு மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சியை வழங்கும்.
- ❖ பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக அனைத்து மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் உள்ள கிராமங்களில் 'நிர்பய் திருஷ்டி' திட்டத்தின் கீழ் CCTV கேமராக்கள் பொருத்தப்படும்.




## இந்தியாவில் ஆசிய மேம்பாட்டு வங்கியின் முதலீடு

- ❖ இந்தியாவில் தனது முதலீட்டினைத் தொடரும் வகையில், 2026 ஆம் ஆண்டில் இந்தியாவின் தனியார் துறைக்கு சுமார் 1 பில்லியன் டாலர்களை நேரடி நிதி உதவியாக வழங்குவதாக ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB) அறிவித்துள்ளது.
- ❖ 2025 ஆம் ஆண்டில், தனியார் துறை செயல்பாடுகளுக்கு 1 பில்லியன் டாலருக்கும் அதிகமாகவும், இறையாண்மைத் திட்டங்களுக்கு சுமார் 4 பில்லியன் டாலருக்கும் அதிகமாகவும் ஆசிய மேம்பாட்டு வங்கி வழங்கியது.
- ❖ புதுப்பிக்கத்தக்க ஆற்றல், பசுமை ஹைட்ரஜன், மின்னணு-நகர்வு, பசுமைத் தரவு மையங்கள், நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் விவசாயம் போன்ற துறைகளில் இந்த நிதியுதவி கவனம் செலுத்துகிறது.
- ❖ உலகளாவிய இடையூறுகளால் அதிகரித்துள்ள வர்த்தகம் மற்றும் விநியோகச் சங்கிலி நிதியுதவியையும் ஆசிய மேம்பாட்டு வங்கி ஆதரிக்கிறது.

- இந்த நிதியுதவியானது இந்தியாவின் மேம்பாட்டு முன்னுரிமைகள் மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இந்திய விண்வெளித் துறை மின்னணு-பட்டியல்




- புது தில்லியில் நடைபெற்ற 5-வது இந்திய விண்வெளி காங்கிரஸில் (ISC) இந்தியாவின் முதல் 'இந்திய விண்வெளித் துறை மின்னணு-பட்டியல்' வெளியிடப்பட்டது.
- இந்த இந்திய விண்வெளித் துறை மின்னணு-பட்டியலானது, விண்வெளித் துறையின் திறன்களை உள்ளடக்கிய இந்தியாவின் முதல் மையப்படுத்தப்பட்ட டிஜிட்டல் களஞ்சியமாகும்.
- இது இந்தியாவின் விண்வெளிச் சூழலமைப்பின் மேல்நிலை/தொடக்கநிலை, இடைநிலை மற்றும் கீழ்நிலை/இறுதிநிலைப் பிரிவுகளில் உள்ள நிறுவனங்களை ஒருங்கிணைக்கிறது.
- இந்தப் பட்டியலானது இந்திய விண்வெளித் துறை நிறுவனங்களின் திறன்கள், தயாரிப்புகள் மற்றும் சேவைகள் குறித்த தகவல்களை வழங்குகிறது.

- இது தொழில்துறையினர், அரசாங்கம், ஆராய்ச்சியாளர்கள், முதலீட்டாளர்கள் மற்றும் சர்வதேசப் பங்குதாரர்களுக்காகத் தொடர்ந்து புதுப்பிக்கப்படும் ஒரு தளமாக செயல் படுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சர்வதேசப் பெரும் பூனைகள் கூட்டமைப்பு – வங்காள தேசம்

- சர்வதேசப் பெரும் பூனைகள் கூட்டமைப்பின் (IBCA) 27-வது உறுப்பு நாடாக வங்காள தேசம் இணைந்துள்ளது.
- சர்வதேசப் பெரும்பூனைகள் கூட்டமைப்பு (IBCA) என்பது ஏழு பெரும்பூனை இனங்களைப் பாதுகாப்பதற்காக இந்தியாவின் புது தில்லியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ஓர் ஒப்பந்த அடிப்படையிலான அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.
- புலிகள் பாதுகாப்புத் திட்டத்தின் 50வது ஆண்டு விழாவின் போது, 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பிரதமர் நரேந்திர மோடியால் இக்கூட்டமைப்பு தொடங்கப்பட்டது என்பதோடு மேலும் இது 2025 ஆம் ஆண்டு ஜனவரி 23 அன்று ஓர் ஒப்பந்த அடிப்படையிலான அமைப்பாக மாறியது.
- புலி, சிங்கம், சிறுத்தை, பனிச்சிறுத்தை, சிறுத்தைப்புலி, ஜாகுவார் மற்றும் பூமா ஆகிய ஏழு பெரும்பூனை இனங்கள் இக்கூட்டமைப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- இந்தியா மற்றும் வங்காள தேசம் பகிர்ந்துகொள்ளும் சுந்தரவனக் காடுகளில் உள்ள வங்காளப் புலிகளின் பாதுகாப்பு உட்பட, பெரும்பூனைகள் பாதுகாப்பில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக இக்கூட்டமைப்பில் வங்காள தேசம் இணைந்து உள்ளது.




## வெனிசுலா நிலநடுக்கம் 2026 – இரட்டை நில அதிர்வு நிகழ்வு

- வெனிசுலாவில் ஏற்பட்ட இரண்டு சக்தி வாய்ந்த நிலநடுக்கங்கள் பெரும் அழிவை ஏற்படுத்தியதுடன், அவசரகால மீட்புப் பணிகளுக்கும் வழிவகுத்தன.
- சான் பெலிப்க்கு அருகே ரிக்டர் அளவுகோலில் 7.2 ஆகப் பதிவான நிலநடுக்கம் ஏற்பட்டது, அதனைத் தொடர்ந்து 39 வினாடிகளுக்குள் மோரோன் அருகே 7.5 ரிக்டர்

அளவிலான சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

❖ கரீபியன் தட்டு மற்றும் தென் அமெரிக்கத் தட்டு ஆகியவற்றின் எல்லையில் ஏற்பட்ட ஆழமற்ற மேலோட்டமான பக்கவாட்டு நகர்வுப் பிளவு காரணமாக இந்த நில நடுக்கங்கள் ஏற்பட்டன.

❖ இந்த நிகழ்வு 'இரட்டை நில அதிர்வு' என்று அழைக்கப்படுகிறது, அதாவது ஒத்த அளவிலான இரண்டு பெரிய நிலநடுக்கங்கள் நேரத்திலும் இடத்திலும் நெருக்கமாக நிகழ்வதைக் குறிக்கிறது.

❖ சாதாரண பின்னதிர்வுகளில் ஒரே ஒரு பிரதான நிலநடுக்கம் மட்டுமே ஏற்படும், ஆனால், ஒரு இரட்டை நில அதிர்வு நிகழ்வில், இரண்டு நிலநடுக்கங்களும் முதன்மை நிலநடுக்கங்களாகவே செயல்படுகின்றன.




# மாநிலச் செய்திகள்

## ராஜோலிபண்டா மாற்றுத் திட்டம் - தெலுங்கானா

❖ ராஜோலிபண்டா மாற்றுத் திட்டத்தில் உள்ள நீர் பகிர்வு மற்றும் நீரோட்டச் சிக்கல்கள் குறித்து மத்திய அரசு மற்றும் அண்டை மாநிலங்களிடம் தெலுங்கானா நிரந்தரத் தீர்வைக் கோரியுள்ளது.

❖ இத்திட்டம் தெலுங்கானாவின் பாலமூர் (மகபூப்நகர்) பகுதியில் உள்ள 75 கிராமங்களில் சுமார் 83,900 ஏக்கர் நிலப்பரப்பிற்கு பாசன வசதியை வழங்குகிறது.

❖ தெலுங்கானாவிற்கு 17.9 டிஎம்சி நீர் ஒதுக்கப்பட்டுள்ளது, ஆனால் நீரோட்டக் கட்டுப்பாடுகள் காரணமாக சுமார் 6 டிஎம்சி நீரை மட்டுமே அதனால் பெற முடிகிறது.


❖ துங்கபத்திரை நதி அமைப்பில் ஏற்படும் அதிகப்படியான வண்டல் படிவு, கால்வாய் முகப்பில் உள்ள கட்டமைப்புப் பிரச்சனைகள் மற்றும் நதி நீரோட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவை இதிலுள்ள முக்கியப் பிரச்சனைகளாகும்.

❖ கால்வாய்களில் நீர் நுழைவதை மேம்படுத்துவதற்காக தூர்வாருதல், தடுப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் தடுப்புச் சுவர் அமைத்தல் ஆகியவற்றை 2004 ஆம் ஆண்டின் நிபுணர் குழு பரிந்துரைத்தது.

❖ ராஜோலிபண்டா நீர்மாற்றுத் திட்டம் (RDS) என்பது கிருஷ்ணா நதியின் துணை நதியான துங்கபத்ரா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட ஒரு மாநிலங்களுக்கு

இடையேயான நீர்ப்பாசனத் திட்டமாகும்.

- வறட்சியால் பாதிக்கப்படக் கூடிய விவசாயப் பகுதிகளுக்கு இது ஒரு இன்றியமையாத உயிர்நாடியாக விளங்குகிறது என்பதோடு மேலும், இது தெலங்கானா, கர்நாடகா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மூன்று ஆற்றங்கரை மாநிலங்களுக்குப் பயன் அளிக்கிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★